. 4 பக்கங்கள் . விலை ரூ. 5





# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL

RNI No : TNTAM/2023/85936

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 29.03.2026 • மலர் 04 • இதழ்: 87

• Edition : Nagercoil • 29.03.2026 • Vol : 04 • Issue : 87 • Page : 4 • Rs. 5/-





# திமுகவின் 164 வேட்பாளர்கள் அறிவிப்பு

## முழு பட்டியல் வெளியீடு

திமுகவின் 164 வேட்பாளர்கள் அறிவிப்பு

தமிழினி12 minutes

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்ரல் 23ம் தேதி நடைபெறவிருக்கும் நிலையில், தேர்தலில் பதிவாகும் வாக்குகள் மே 4ஆம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. இதனையொட்டி, திமுக, அதிமுக, பாஜக உள்ளிட்ட கட்சிகள் தீவிரமாக களப்பணியாற்றி வருகின்றனர். அதிமுகவின் 2ம் கட்ட வேட்பாளர்களின் பட்டியலை அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று வெளியிட்டார்.

இதனிடையே, திமுக கூட்டணியில் இடம்பெற்றுள்ள காங்கிரஸ், தேமுதிக, விசிக, இடதுசாரிகள், மதிமுக உள்ளிட்ட கட்சிகள் போட்டியிடும் தொகுதிகளின் விவரம்



நேற்று (மார்ச் 28) அறிவிக்கப்பட்டுள்ளது. அதோடு, திமுக சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலை முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ளார். இது குறித்து செய்தியாளர்களிடம் ஸ்டாலின் கூறும்போது "மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி அரசியல் கூட்டணி மட்டுமல்ல, கொள்கை கூட்டணி. 164 தொகுதிகளில் திமுக நேரடியாக களம் காண்கிறது. 70 தொகுதிகளை கூட்டணிக் கட்சிகளுடன் பகிர்ந்து கொண்டுள்ளோம். 175 தொகுதிகளில் உதயசூரியன் சின்னமும், 59 தொகுதிகளில் கூட்டணிக் கட்சிகளின் சின்னமும் போட்டியிடுகின்றன" என்றார்.

### 5 முறை வென்ற போதிலும்

## நயினார் நாகேந்திரனுக்காக சாத்தூரை விட்டுக் கொடுத்த அதிமுக

சாத்தூர், மார்ச். 29



விருதுநகர் மாவட்டம் சாத்தூர் சட்டப்பேரவைத் தொகுதியில் 5 முறை அதிமுக வெற்றிபெற்றபோதிலும் பாஜக தமிழக தலைவர் நயினார் நாகேந்திரன் போட்டியிட விரும்பி கேட்டதால், இத்தொகுதியை பாரதிய ஜனதா கட்சிக்கு அதிமுக விட்டுக்கொடுத்தது.

சாத்தூர் சட்டப்பேரவைத் தொகுதியில் 3 முறை இந்திய தேசிய காங்கிரஸும், ஒரு முறை பார்வர்டு பிளாக் கட்சியும், 5 முறை அதிமுகவும், 4 முறை திமுகவும் வெற்றிபெற்றுள்ளன.

கடந்த 2006ல் திமுக சார்பில் போட்டியிட்ட சாத்தூர் ராமச்சந்திரனும், 2011ல் அதிமுக சார்பில் போட்டியிட்ட ஆர்.பி. உதயகுமாரும் வெற்றிபெற்றனர்.

2016ல் அதிமுகவில் சுப்பிரமணியனும், 2019 இடைத்தேர்தலில் அதிமுக ராஜவர்மனும் வெற்றி பெற்றனர். கடந்த 2021 தேர்தலில் திமுக சார்பில் போட்டியிட்ட மதிமுக வேட்பாளர் ரகுராமன் வெற்றிபெற்றார்.

ஜெயலலிதா இறப்புக்குப் பிறகு பழனிசாமி முதல்வரானதும் அதிமுகவில் விருதுநகர் மாவட்டம் கட்சி ரீதியாக இரண்டாகப் பிரிக்கப்பட்டு கிழக்கு மாவட்டச் செயலாளராக ரவிச்சந்திரனும், மேற்கு மாவட்டச் செயலாளராக முன்னாள் அமைச்சர் கே.டி.ராஜேந்திர பாலாஜியும் நியமிக்கப்பட்டனர்.

இதன் பின்னர், அதிமுகவில் இரு கோஷ்டி ஏற்பட்டது.

கடந்த 2016ல் இத் தொகுதி அதிமுகவுக்கு கொடுக்கப்பட்டபோது வெம்பக்கோட்டை கிழக்கு ஒன்றியச் செயலாளராக இருந்த எதிர்கோட்டை சுப்பிரமணியன் திமுக வேட்பாளர் சீனிவாசனை தோற்கடித்து வெற்றிபெற்றார்.

ஜெயலலிதா இறப்புக்குப் பிறகு டி.டி.வி.தினகரன் தொடங்கிய அமமுகவில் சுப்பிரமணியன் இணைந்தார். அவருடன் கட்சித் தாவலில் ஈடுபட்ட 18 எம்.எல்.ஏ.க்களும் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.

2019ல் மக்களவைத் தேர்தலுடன் சாத்தூர் சட்டப்பேரவை இடைத் தேர்தலும் நடத்தப்பட்டது. அப்போது அமமுக சார்பில் சுப்பிரமணியன் மீண்டும் போட்டியிட்டுத் தோல்வி அடைந்தார். அதிமுக சார்பில் போட்டியிட்ட ராஜவர்மன் வெற்றி பெற்றார்.

பின்னர் சுப்பிரமணியன், சேலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அப்போதைய முதல்வர் பழனிசாமி முன்னிலையில் மீண்டும் அதிமுகவில் இணைந்தார்.

இந்த சட்டப்பேரவைத் தேர்தலில் ரவிச்சந்திரன், ராஜவர்மன் ஆகியோர் சீட் பெற தீவிர முயற்சியில் இருந்தனர். ரவிச்சந்திரனுக்கே வாய்ப்பு அதிகம் என்ற சூழலில், சாத்தூர் தொகுதி பாஜகவுக்கு ஒதுக்கப்பட்டது.

பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் சாத்தூரில் போட்டியிட விரும்பி, அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமியிடம் நேரடியாக கேட்டுள்ளார். கூட்டணி கட்சியின் தலைவர் என்ற முறையில் ரவிச்சந்திரனிடம் விட்டுக்கொடுக்கும்படி பழனிசாமி கேட்டுள்ளார்.

இதையடுத்து சாத்தூர் தொகுதி பாஜகவுக்கு கை மாறியது. ரவிச்சந்திரன் விரும்பியிருந்தால், அருப்புக்கோட்டை அல்லது திருச்சுழி யில் போட்டியிட்டிருக்கலாம்.

அத்தொகுதி நிர்வாகிகளுக்காக ஒதுங்கிக்கொண்ட ரவிச்சந்திரன் கூட்டணிக்காக சாத்தூரை விட்டுக் கொடுத்ததால், அவருக்கு உரிய முக்கியத்துவத்தை கட்சி வழங்கும் என கட்சியினர் எதிர்பார்க்கின்றனர்.

### செல்லூர் ராஜுவை மீறி

## மதுரை வடக்கு தொகுதியில் சீட் பெற்ற டாக்டர் சரவணன்!

மதுரை , மார்ச். 29



மதுரை வடக்கு தொகுதியில் வேட்பாளராக அறிவிப்பதற்கு முன்பே தேர்தல் பணிகளை தொடங்கிய டாக்டர் சரவணன், மாநகர் செயலாளர் செல்லூர் ராஜூவை மீறி கட்சித் தலைமை யின் நேரடி ஆசியுடன் சீட் பெற்றுள்ளார்.

மதுரை வடக்குத் தொகுதியில் திமுக மாநகரச் செயலாளர் தளபதி தற்போது எம்எல்ஏவாக உள்ளார். இங்கு அதிமுக 2 முறையும், திமுக கடந்த முறையும் வெற்றி பெற்றுள்ளது. மீண்டும் தளபதியே இந்த தொகுதியில் போட்டியிட உள்ளார்.

தொகுதியில் முகாமிட்டு மக்கள் பிரச்சினைகளில் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளார். இந்த முறை அதிமுக இந்த தொகுதியை கைப்பற்றும் நோக்கில், முன்னாள் எம்எல்ஏ டாக்டர் சரவணனை நேற்று வேட்பாளராக அறிவித்துள்ளது.

சரவணன் அதிமுக மருத்துவர் அணி இணைச் செயலாளராக உள்ளார். ஏற்கெனவே திருப்பரங் குன்றத்தில் எம்எல்ஏவாக இருந்தவர். திமுகவில் 2021ம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலில் 'சீட்' கிடைக்காததால் தேர்தல் நேரத்தில் பாஜகவில் சேர்ந்து அதிமுக கூட்டணியில் அக்கட்சி சார்பில் போட்டியிட்டு 50,094 வாக்குகளைப் பெற்றார்.

மாநகர திமுக செயலாளர் தளபதி 73,010 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். இந்த முறை எப்படியும் சீட் வாங்கிவிடுவோம் என்ற நம்பிக் கையில், கடந்த 5 ஆண்டுகளாக தன்னுடைய மருத்துவமனை, டிரஸ்ட் உள்ளிட்டவை சார்பில் நலத்திட்ட உதவிகள், மருத்துவ முகாம்கள் நடத்தி மக்களிடம் நெருக்கம் காட்டி வந்துள்ளார்.

மாநகர அதிமுக செயலாளர் செல்லூர் ராஜூ, இவரை வடக்கு தொகுதிக்கு பரிந்துரை செய்யவில்லை. ஆனாலும் கடந்த மக்களவைத் தேர்தலில் அதிமுக முக்கிய நிர்வாகிகள் யாரும் மதுரை தொகுதியில் போட்டியிட முன்வராத நிலையில் டாக்டர் சரவணன், தனது சொந்தப் பணத்தை செலவு செய்து போட்டியிட்டு தோல்வியடைந்தார்.

மாநகர நிர்வாகிகளின் ஒத்துழைப்பு இல்லாததால், அதிமுக 3ம் இடத்துக்குச் சென்றது. அதனால், கட்சித்தலைமை இவருக்கு சட்டப்பேரவை தேர்தலில் வாய்ப்பு வழங்குவ தாக உறுதியளித்து இருந்தது. தலைமை கூறியது போலவே, தற்போது அவருக்கு சீட்டும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த வாய்ப்பு, டாக்டர் சரவணனின் அரசியல் வாழ்க்கையில் முக்கிய மானதாக கருதப்படுகிறது. அதனால் அவர் திமுகவுக்குகடும் போட்டியை கொடுப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆளுங்கட்சி, வாக்காளர் கவனிப்பு போன்றவற்றால் இந்த முறையும் வெற்றி பெறலாம் என தளபதி திட்டமிட்டு வருகிறார். வடக்குத் தொகுதியில் திமுகஅதிமுக இடையே கடும் போட்டி இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 11 தொகுதிகளில் போட்டியிடும் அ.ம.மு.க. வேட்பாளர் பட்டியல்



சென்னை, மார்ச். 29

அ.தி.மு.க. பா.ஜ.க. கூட்டணியில், அ.ம.மு.க.வுக்கு நாங்குநேரி, ஒட்டப்பிடாரம், சைதாப்பேட்டை, மடத்துக்குளம், பூந்தமல்லி, திருச்சி மேற்கு, பெரியகுளம், மன்னார்குடி, திருவையாறு, காரைக்குடி, திருப்பத்தூர் ஆகிய 11 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த தொகுதிகளில் போட்டியிடும் அ.ம.மு.க. வேட்பாளர்பட்டியலைகட்சியின்பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன் இன்று சென்னையில் வெளியிட்டார். அதன் விவரம் வருமாறு:

நாங்குநேரி இசக்கிமுத்து
ஒட்டப்பிடாரம் சுந்தர் ராஜன்
சைதாப்பேட்டை செந்தமிழன்
மடத்துக்குளம் சண்முகவேலு
பூந்தமல்லி ஏழுமலை
திருச்சி மேற்கு தொட்டியம் ராஜசேகரன்
பெரியகுளம் கதிர்காமு
மன்னார்குடி எஸ்.காமராஜ்
திருவையாறு வேலு கார்த்திகேயன்
காரைக்குடி தேர்போகி பாண்டி
திருப்பத்தூர் ஞானசேகரன்

வேட்பாளர்கள் அறிவிப்பை தொடர்ந்து, அ.ம.மு.க. தேர்தல் அறிக்கையையும் கட்சியின் பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரன் வெளியிட்டார்.

### பெரம்பூர் பிரச்சாரம் விவகாரம்:

## தலைமைச் செயலகத்தில் தேர்தல் அதிகாரியிடம் விஜய் நேரில் புகார்

சென்னை, மார்ச். 29



சென்னை தலைமைத் செயலகத்தில் தலைமை தேர்தல் அதிகாரியிடம் தவெக தலைவர் விஜய் புகார் மனு அளித்துள்ளார்.

பெரம்பூரில் பிரச்சாரம் செய்ய தவெக தலைவர் விஜய்க்கு அனுமதி மறுக்கப்பட்ட நிலையில், சென்னை தலைமை செயலகத்தில் நேற்று தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக்கை நேரில் சந்தித்து விஜய் நேற்று மனு ஒன்றை அளித்தார்.

அந்த மனுவில், அதிகாரிகள் திமுகவுக்கு ஆதரவாக செயல்படுவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும், தலைமைச் செயலாளர், சென்னை காவல் ஆணையர், ஏடிஜிபி, நிதித்துறை செயலாளர் உள்ளிட்ட 10 அதிகாரிகளை மாற்ற வேண்டும் என்றும் அவர் அந்த மனுவில் வலியுறுத்தியுள்ளார். அத்துடன், பிரச்சாரம் செய்ய தனக்கு அனுமதி மறுக்கப்படுவதற்காக 10 காரணங்களையும் அவர் தனது மனுவில் பட்டியலிட்டுள்ளார்.

### பரபரக்கும் தேர்தல் களம்:

## 3 தி.மு.க. அமைச்சர் தொகுதிகளில் மோதும் அ.ம.மு.க.



சென்னை, மார்ச். 29

தமிழகத்தில் அடுத்த மாதம் (ஏப்ரல்) 23ந் தேதி சட்டசபை தேர்தல் நடைபெறுகிறது. இந்தத் தேர்தலில் 4 முனைப் போட்டி நிலவுகிறது. பிரதான எதிர்க் கட்சியான அ.தி.மு.க. கூட்டணியில், அ.தி.மு.க. 167, பா.ஜ.க. 26, பா.ம.க. 18, அ.ம.மு.க. 11, த.மா.கா. 5, புதிய நீதிக்கட்சி 2, இந்திய ஜனநாயக கட்சி 2, தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம் 1, புரட்சி பாரதம் 1, சிங்கத் தமிழர் முன்னேற்ற கழகம் 1 என 234 தொகுதிகளிலும் களம் காண்கிறது. அ.தி.மு.க. பா.ஜ.க. கூட்டணியில், அ.ம.மு.க.வுக்கான தொகுதிகளாக நாங்குநேரி, ஒட்டப்பிடாரம், சைதாப்பேட்டை, மடத்துக்குளம், பூந்தமல்லி, திருச்சி மேற்கு, பெரியகுளம், மன்னார்குடி, திருவையாறு, காரைக்குடி, திருப்பத்தூர் ஆகியவை ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் இந்த தொகுதிகளில் போட்டியிடும் அ.ம.மு.க. வேட்பாளர் பட்டியலை கட்சியின் பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரன் இன்று சென்னையில் வெளியிட்டார். இதன்படி நாங்குநேரி இசக்கிமுத்து, ஒட்டப்பிடாரம் சுந்தர் ராஜன், சைதாப்பேட்டை செந்தமிழன், மடத்துக்குளம் சண்முகவேலு, பூந்தமல்லி (தனி) ஏழுமலை, திருச்சி மேற்கு தொட்டியம் ராஜசேகரன், பெரியகுளம் (தனி) கதிர்காமு, மன்னார்குடி எஸ்.காமராஜ், திருவையாறு வேலு கார்த்திகேயன், காரைக்குடி தேர்போகி பாண்டி, திருப்பத்தூர் ஞானசேகரன் ஆகியோர் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். வேட்பாளர்கள் அறிவிப்பை தொடர்ந்து, அ.ம.மு.க. தேர்தல் அறிக்கையையும் கட்சியின் பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரன் வெளியிட்டார்.





தின தமிழ்

நிருபர்கள் தேவை

வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக

தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை

தகுதிகள்

குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்

மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்

99944 66200 – 70102 64701

# இரண்டாம் கட்ட சட்டமன்ற தேர்தலில் வேட்பாளர்கள் பட்டியல் வெளியீடு



திருப்பூர், மார்ச்28

அஇஅதிமுக வின் இரண்டாம் கட்ட சட்டமன்ற தேர்தலின் வேட்பாளர்கள் பட்டியலை அஇ அதிமுக வின் பொதுசெயலாளர், முன்னாள் முதலமைச்சர் எடப் பாடி பழனிசாமி வெளியிட்டார்.

அதன்படி திருப்பூர் வடக்கு சட் டமன்றத் தொகுதியில் முன்னாள் அமைச்சர்,கழக அமைப்புச் செய லாளரான எம்.எஸ்.எம். ஆனந்தன், பல்லடம் சட்டமன்றத் தொகுதி யில் முன்னாள் சட்டமன்ற உறுப்பின ரும்,கழக விவசாய பிரிவு இணை செயலா ளருமான கே.பி.பரமசிவம், காங்கேயம் சட்டமன்றத் தொகுதியில் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினரும், மேற்கு ஒன்றிய கழக செயலாளரு மான என்.எஸ்.என். நடராஜன், தாராபுரம்(தனி) தொகுதியில் முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு தலைவர், திருப்பூர் புறநகர் கிழக்கு மாவட்ட கழக இணை செயலாளர் சத்திய பாமா, உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் முன்னாள் அமைச்சரும்,கழக அமைப்புச்செயலாளர், திருப்பூர் புறநகர் மேற்கு மாவட்ட கழக செயலாளருமான உடுமலை ராதாகிருஷ் ணன் ஆகியோரை வேட்பாளர்களாக அறி விக்கப்பட்டுள்ளனர்.

# விளாத்திகுளம் தொகுதி அதிமுக வேட்பாளர் சத்யா அறிவிப்பு

## அதிமுகவினர் வெடி வெடித்து இனிப்புகள் வழங்கி கொண்டாட்டம்



விளாத்திகுளம் மார்ச் 29.

2026சட்டமன்றத்தேர்தலைமுன்னிட்டு, அதிமுக சார்பில் போட்டியிடும் இரண் டாம் கட்ட வேட்பாளர் பட்டியலை அதி முக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச் சாமி வெளியிட்டார்.

இதனைத்தொடர்ந்து விளாத்திகுளம் சட் டமன்றத் தொகுதி அதிமுக வேட்பாளராக கோவில்பட்டி அருகே உள்ள கே.துரைச்சா மிபுரத்தை சேர்ந்த அதிமுகவின்நீண்டகால விசுவாசியும், தற்போதைய அதிமுக கட்சி யின் பொதுக்குழு உறுப்பினராக பணி யாற்றி வரும் ராமச்சந்திரனின் மகளான சத்யாவை அதிகாரப்பூர்வமாக எடப்பாடி பழனிச்சாமி விளாத்திகுளம் தொகுதி அதி முக வேட்பாளராக அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து விளாத்திகுளம் தொகுதி அதிமுக, பாரதிய ஜனதா கட்சியி னர், அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தி னர் உள்ளிட்ட கூட்டணி தோழமைக் கட் சியினர், விளாத்திகுளம் பேருந்து நிலையம் முன்பு பட்டாசுகளை வெடித்து பொது மக் களுக்கு இனிப்புகள் வழங்கி உற்சாகமாகக் கொண்டாடினர். கடந்த 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலுக்குப் பிறகு தூத்துக்குடி மாவட்ட ஊராட்சி குழு தலைவராக சத்யா பொறுப்பு வகித்து வந் தார். 2021ல் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதை தொடர்ந்து அவருக்கு எதிராக நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டுவ ரப்பட்டது. நீண்ட சட்டப்போராட்டங்க ளுக்கு பிறகு செப்டம்பர் 2022ல் அவர் அப்ப பதவியில் இருந்து நீக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# முதியோர்களின் ஆரோக்கியத்தை கவனித்து கொள்வது மிகவும் இன்றியமையாதது

## கிரிக்கெட் வீரர் டோனி பேச்சு




சென்னை, மார்ச் 30,

வாபியில் உள்ள மெரிலின் உலகளாவிய தலைமை அலுவலகத்தில் நடைபெற பட்ச்பனா ஒய்வு பெறக் கூடாது என்ற தலைப்பில் முன்னாள் இந்திய கிரிக்கெட் கேப்டன் எம்.எஸ். தோனி உரையாற்றி னார்.

இதில் மூன்று தலைமுறைகள் உறவுகள் பற்றிய உரையாடல்கள் பகிரப்பட்டன.

இந்த மாபெரும் இயக்கத்தின் ஒரு குறிப் பிட்ட நீட்சியாக, "பட்ச்பனா ஒய்வு பெறக் கூடாது" பிரச்சாரமானது, "சிகிச்சை அவசி யம்" என்ற தளத்தின் கீழ் மூத்த குடிமக்களுக்கான ஒரு பிரத்யேக சுகாதார முன்னெடுப்பை அறிமுகப்படுத்துகிறது.

குறிப்பாக, இந்தியாவில் முதியோர்களிடையே வாழ்க்கை முறை தொடர்பான பாதிப்புகள் சீராக அதிகரித்து வரும்நிலையில், வாழ்வின்ஒவ்வொருகட் டத்திலும் கண்ணியத்தையும் உற்சாகத்தை யும் பேணுவதன் முக்கியத்துவத்தை இந் தக் கலந்துரையாடல் எடுத்துக்காட்டியது.

இந்த பிரச்சாரத்தின் நோக்கம் குறித்து பேசிய எம்.எஸ். தோனி, "உங்கள் ஆரோக் கியத்தை கவனித்துக்கொள்வது மிகவும் இன்றியமையாததாகும். முதியவர்களின் நலன்களில் இளைய தலைமுறையின ருக்கு பங்கு உள்ளது. ".இதை பெற்றோர் கள் தங்கள் பிள்ளைகளுக்கு வழிகாட்ட வேண்டும் நம் பெற்றோர் மற்றும் தாத்தா பாட்டிக்கு அவர்கள் தகுதியான கவனிப்பு, கவனம் மற்றும் ஆதரவு கிடைப்பதை உறுதி செய்யும் பொறுப்பு நம் இளைய தலைமுறையினருக்கு உள்ளது. " சிகிச்சை அவசியம் போன்ற முயற்சிகள் அந்த திசையில் ஒரு படியாகும், மேலும் இதில் ஒரு பகுதியாக இருப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்" என்று வலியுறுத் தினார்.

# பாரதிய ஜனதா கட்சியின் ஆன்மீகப் பிரிவு மாநிலத் தலைவர் செய்தியாளர் சந்திப்பு



கோவை மார்ச்:29

கோவை காந்திபுரம் பகுதியில் கோவையில் பிரபல ஜோதிடர் பாரதிய ஜனதா கட்சியின் ஆன்மீகப் பிரிவு மாநிலத் தலைவர் ஷெல்வி "விரல் நுனியே அஸ்தி ரம்" என்ற பாடலை வெளியீடு செய்தார்

இதுகுறித்துஅவர்கூறுகையில்:ஆன்மீகப் பிரிவின் சார்பாக,அனைவரும் ஓட்டு போட வேண்டும் என்பதை வலியுறுத் தவே இந்தப் பாடலை வெளியீடு செய் தோம் மேலும் ஆன்மீக பிரிவு சார்பில் தொடரப்பட்ட வழக்கில் உயர்நீதிமன்ற நீதிபதிகள் சதிஷ் குமார்,ஜோதிராமர் ஆகி யோரிடத்தில் அடங்கிய பெஞ்ச் முன்பு பழனி கோயிலில் 165 கோடி டென்டர் முறை கேடு வழக்கு நடைபெற்று வருகி றது.

இது குறித்து ஆராய்ந்து அறிக்கைதர குழு ஒன்றை நீதிமன்றம் அமைத்துள்ளது இது வரவேற்கத்தக்கது.தமிழகத்தில் பல்வேறு கோவில்களில் நடைபெற்று வரும் ஊழல் கள் குறித்த விசாரிக்க வலியுறுத்துவோம். பாஜக ஆன்மீக பிரிவு பிரிவு இனி மேல்,ஹிந்து அறநிலையத்துறைக்கு சிம்ம சொப்பனமாக விளங்கும் என்றார்.சுமார் 4000 கோயில்களில் நடைபெற்ற கும்பாபி ஷேகம் அனைத்தும் பக்தர்கள் கொடுத்த நிதியில் தான் நடைபெற்றது என்றார்.



திருப்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட தூய நெஞ்சக் கல்லூரியில், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 23 ஏப்ரல் 2026 அன்று நடைபெற உள்ளதையொட்டி, தலைமை வாக்குச்சாவடி (PRESIDING OFFCER'S PO, PO1, PO2, PO3) அலுவலர்கள் தேர்தல் நாளில் பணிபுரிவதற்கான முதற்கட்ட பயிற்சி வகுப்பு நடைபெற்று வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சியர் க.சிவசௌந்திரவல்லி. பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். உடன் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் 050.திருப்பத்தூர் சட்டமன்றத்தொகுதி வரதராஜன், முதன்மை கல்வி அலுவலர் புண்ணியகோட்டி, திருப்பத்தூர் வட்டாட்சியர்கள் நவநீதன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

## துறையூரில்

# காங்கிரஸுக்கு ஒதுக்கியதை கண்டித்து ஆர்ப்பாட்டம்



திருச்சி, மார்ச். 29

துறையூர்தனிசட்டமன்றதொகுதியை திமுக கூட்டணியில் காங்கிரசுக்கு ஒதுக்கி அறிவிக்கப்பட்டதை அடுத்து, திமுக நிர்வாகிகள் சிலர் துறையூர் பேருந்து நிலையம் அருகே அண்ணா சிலை பகுதியில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்ததொகுதிஒதுக்கீட்டிற்குஎதிர்ப்பு தெரிவித்து நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. இது திமுகவினரிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# பால்குளம் அரசு கல்லூரியில் விளையாட்டு விழா



கன்னியாகுமரி மார்ச் 29

குமரி மாவட்டம் அஞ்சு கிராமத்தை அடுத்த பால்குளத்தில் அமைந்துள்ள கன்னியாகுமரி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் விளையாட்டு விழா நடைபெற்றது.

விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் சரோஜா தலைமை ஏற்று தலைமை உரை ஆற்றினார். முனைவர் மாதவன் வரவேற்றார். லக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் உடற்கல்வி இயக்குனர் முனைவர் ஜெரின் ஜோஸ் பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினார். முனைவர் சரவணன் நன்றியுரை கூறினார்

# 100% வாக்களிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு பாரம்பரிய சிலம்பம் விளையாட்டு

## கலெக்டர் துவக்கி வைத்து பார்வையிட்டார்கள்!!



திருப்பூர்: மார்ச்29

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026 நடைபெறுவதையொட்டி மாவட்ட தேர் தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் மனிஷ் நாரணவரே திருப்பூர் மாநகராட்சி, நஞ்சப்பா நகரவை ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் தேர்தலில் 100 சதவீதம் வாக்க ளிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு பாரம்பரிய சிலம்பம் மற்றும் டென்னி காய்ட் விளையாட்டுகளைதுவக்கி வைத்து பார்வையிட்டு, பொதுமக்களுக்கு விழிப்பு ணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கி னார்கள்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தர வின்படி தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 திருப்பூர் மாவட்டத்திற்குட் பட்ட 101 தாராபுரம் (தனி) 102 காங்கேயம். 112 அவிநாசி தனி), 113 திருப்பூர் (வடக்கு) 114 திருப்பூர் (தெற்கு), 115 பல்லடம், 125 உடுமலைப்பேட்டை 126 மடத்துக்குளம் ஆகிய 8 சட்டமன்ற தொகுதிகளுக்கு நடை பெறவுள்ளதையொட்டி மாவட்டம் முழு வதும் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசி யம் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நாள்தோறும் நடைபெற்று வருகிறது.

திருப்பூர் மாநகராட்சி, நஞ்சப்பா நக ரவை ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு பாரம்ப ரிய சிலம்பம் மற்றும் டென்னிகாய்ட் விளையாட்டுகளை துவக்கி வைத்து பார் வையிட்டு, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங் கினார்கள்.

ஆட்சித்தலைவர் தொடர்ந்து. மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட மனிஷ் நாரண வரே தலைமையில் தேர்தலில் 100 சதவீ தம் வாக்களிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு உறுதிமொழி விளாயட்டு வீரர்கள். பொதுமக்கள் ஆகியோர் ஏற்றுக் கொண்டார்கள்,

இந்நிகழ்வின்போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு மதி க.சங்கமித்திரை, மாவட்ட விளை யாட்டு அலுவலர் ரகுகுமார் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் செ.கு.சதீஸ்குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் உதவி இயக்குநர் (பயிற்சி) செல்வி.ஹர்ஷா மற் றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்..

## கரும்பாட்டூர் ஊராட்சியில்

# வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி



தென்தாமரைகுளம்., மார்ச். 29

கரும்பாட்டூர் ஊராட்சியில் சட்டமன்ற தேர்தலில் 100% வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு முகாமில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் அசுபதி தலைமையில் வாக்காளர் உறுதி மொழி எடுக்கபட்டது. மேலும் வாக்களிப்பதன் அவசியம் குறித்து கையெழுத்து இயக்கம்,செல்பி பாய்ன்ட், பேரணி, பர மபத விளையாட்டு நடைபெற்றது. இன்நிகழ்வில் மண் டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் வேல்முருகன், ஊராட்சி செயலர் காளியப்பன், மகளிர் திட்ட பொறுப் பாளர் சந்திரா,ஏசு அனுஷா பாய், சுய உதவி குழு கூட்ட மைப்பு பொறுப்பாளர் உள்பட பலர் கலந்து கொண்ட னர்




திருப்பத்தூர்மாவட்டஆட்சியர்அலுவலகவளாகத்தில், தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026, 23 ஏப்ரல் 2026 அன்று நடைபெறுவதை முன்னிட்டு, 100% வாக்கு அளிப்பது குறித்து விழிப்புணர்வு பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் க. சிவசௌந்திரவல்லி கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் மகளிர் திட்ட இயக்குநர் விஜயகுமாரி, மாவட்ட சமூக நல அலுவலர் சுமதி முன்னோடி வங்கி மேலாளர் ராஜன், உதவி திட்ட அலுவலர்கள் பாரதி, திருமேனி மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட கல்லூரி மாணவிகள், மூன்றாம் பாலினத்தவர், அரசு அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

# மக்கள் பொது மனித சமூக சேவை கலந்தாய்வு கூட்டம்!



திருப்பூர் :மார்ச்29

மனிதனின் ஒழுக்க முறைகள் அனைவருக்கும் மிகவும் அவசியம். மக்களுக்கு தேவைப்படும் உதவிகளை உடனுக்குடனே செய்து அவர்களுக்கு ஆலோசனை வழங்கி வரும் மக்கள் பொது மனித சமூக சேவை பயணிக்கும் நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அமைப்பில் பயணிக்கும் தலைவர்கள் செயலாளர் பொருளாளர்கள் நிர்வாகிகள் மகளிர் அணி மற்றும் திருப்பூர் வடக்கு மாவட்ட நிர்வாகிகள் அனைவரையும் வருக வருக என இருகரம் கூப்பி வரவேற்கிறேன்.

தங்களை அன்புடன் வரவேற்கும் என்றென்றும் உங்களுடன் எம். பி .எஸ் தலைமை செயலாளர் பாபு

# மண்ணச்சநல்லூரில் ஈசியாக வெற்றி பெறுவோம்: ஆர்வி பரதன் பேட்டி



திருச்சி, மார்ச். 29

அதிமுக கூட்டணியில் அங்கம் வகிக்கும் சிங்க தமிழர் முன்னேற்ற கழகத்தின் தலைவர் ஆர். வி. பரதன், மண் ணச்சநல்லூர் தொகுதியில் போட்டியிடுகிறார். திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சட்ட சபை தேர்தலில் மத்திய மண்டலத்தில் உள்ள அனைத்து கூட்டணி கட்சிகளையும் பெரும்பான்மையான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற அயராது பாடுபடுவோம் என்றும், மண்ணச்சநல்லூர் தொகுதியில் 75 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் எளிதாக வெற்றி பெறுவோம் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

# திருச்சி: குழந்தை திருமணம் செய்த குற்றவாளிக்கு 20 ஆண்டுகள் சிறை

திருச்சி, மார்ச். 29

திருச்சி மணிகண்டம் காவல் நிலைய எல்லைக்குட் பட்ட நாகமங்கலத்தைச் சேர்ந்த 16 வயது சிறுமியை அதே பகுதியைச் சேர்ந்த மணிகண்டன் என்பவர் கடந்த 2020 ஆம் ஆண்டு கடத்திச் சென்று குழந்தை திருமணம் செய்து அவரைபாலியல் பலாத்காரம் செய்துள்ளார். சிறு மியின் தந்தை அளித்த புகாரின் பேரில் மணிகண்டன் கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டார். இது தொடர்பான வழக்கில் திருச்சி மகிளா நீதிமன்ற நீதிபதி குற்றவாளி மணிகண்டனுக்கு 20 ஆண்டுகள் சிறை தண் டனை விதித்து தீர்ப்பளித்தார்.



# மாற்றுத்திறன் வாக்காளர்களின் வாகன பிரச்சார விழிப்புணர்வு பேரணி

## கலெக்டர் துவக்கி வைத்தார்

நாகர்கோவில், மார்ச்.29

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, வரும் தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பதை வலியுறுத்தி, பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன்ஒருபகுதியாக, மாவட்ட ஆட்சியர் அலுவலக முகப்பில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில், "மாற்றுத்திறனாளிகள் அனைவரும் வாக்களிப்போம்" என்ற வாகன சக்கர விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் அழகு மீனா கொடியசைத்து, துவக்கி வைத்தார். தொடர்ந்து அவர் கூறுகையில்:

மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் மாற்றுத்திறன் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட சக்கரநாற்காலி வாகனங்கள், பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலி வாகனங்கள் மற்றும் தமிழ்நாடு உரிமைகள் திட்ட பணியாளர்கள் என 500 வாக்களார்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்கள்.

மேலும் 100% வாக்குரிமை பெற்ற அனைவரும் வாக்களிப்போம் என்ற கையெழுத்து பலகையில், மாற்றுத்திறன் வாக்காளர்கள் ஆர்வமுடன் தங்களது கையெழுத்துக்களைப் பதிவிட்டார்கள். பேரணியில் மாற்றுத்திறனாளிகள் தங்களது மூன்று சக்கர வாகனங்களில் வாக்காளராக இருப்பதில் பெருமிதம் கொள்ளுங்கள்,

வாக்களிக்க தயாராகுங்கள், மனதில் உறுதி வேண்டும், மனசாட்டிப்படி வாக்களிக்க வேண்டும், வாக்களிப்பது நமது உரிமை, என் வாக்கு விற்பனைக்கு அல்ல உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி மகளிர் கிறிஸ்தவகல்லூரி, வடசேரி பேருந்து நிலையம் வழியாக சென்று நாகராஜா திடலில் முடிவடைந்தது. அங்கு மாற்றுத்திறனாளிகள் அனைவரும் ஒன்றிணைந்து "தேர்தலில் நேர்மையாக எவ்வித தூண்டுதலுமின்றி வாக்களிப்போம் என்ற வாக்காளர் விழிப்புணர்வு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இவ்வாறு கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் தேர்தல் கண்காணிப்பு அலுவலர் மற்றும் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மைக்கேல் அந்தோணி பெர்னான்டோ, நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் தினேஷ் சந்திரன், துறை அலுவலர்கள், மாற்றுத்திறனாளிகள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



### பர்கூர் சட்டமன்றதொகுதி

# அதிமுக வேட்பாளர் இ.சி.கோவிந்தராசன் எம்ஜிஆர் சிலைக்கு மரியாதை

கிருஷ்ணகிரி மார்ச் 28:

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் பர்கூர் சட்டமன்ற தொகுதி அதிமுக வேட்பாளர் இ.சி.கோவிந்தராசன் பர்கூர் பேருந்து நிலையத்தில் உள்ள முன்னாள் முதல்வர் எம்ஜிஆர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதைத் தொடர்ந்து அதிமுக நிர்வாகிகள் வேட்பாளர் இ.சி. கோவிந்தராசனை சந்தித்து சால்வை அணிவித்து, பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கி வரவேற்றனர். நிகழ்ச்சியில் மாவட்ட அம்மா பேரவை செயலாளர் எஸ்.எம்.மாதையன், ஒன்றிய கழக செயலாளர்கள் திருமால், ரவிச்சந்திரன், பர்கூர் நகரக் கழக செயலாளர் கணேசன் மற்றும் கூட்டணி கட்சி தலைவர்கள் பாமக மாவட்ட செயலாளர் பழனிவேல், பாமக மாவட்ட தலைவர் ஆறுமுகம், பாஜக முன்னாள் மாவட்ட தலைவர் சிவப்பிரகாசம்,, அமமுக மாவட்ட செயலாளர் கணேச குமார், உள்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள், அதிமுக தொண்டர்கள் என என 3ஆயிரத்திற்க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

### திருவெண்ணெய்நல்லூர் அருகே

# சவுதி அரேபியாவில் விபத்தில் உயிரிழந்த இளைஞரின் உடலுக்கு பொன்முடி எம்.எல்.ஏ., அஞ்சலி



திருவெண்ணெய்நல்லூர்.மார்ச்.29

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெ ய்நல்லூர் அருகே பையூர் கிராமத்தைச் சேர்ந்த மணிவாசன் சவுதி அரேபியாவில் பார்மசி (Pharmacy) துறையில் வேலை பார்த்து வந்தார். இந்நிலையில் கடந்த பிப்ரவரி 19ந் தேதி அங்கு நடந்த சாலை விபத்தில் சிக்கி உயிரிழந்தார். இதையடுத்து மணிவாசன் உடலை சவுதி அரேபியாவில் இருந்து கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்க கோரி அவரது குடும்பத்தினர் திருக்கோவிலூர் சட்டமன்ற உறுப்பினர் பொன்முடி மற்றும் விழுப்புரம் திமுக தெற்கு மாவட்ட செயலாளர் பொன்.கௌதமசிகாமணி ஆகியோரிடம் கோரிக்கை வைத்தனர். இதையடுத்து அங்கு போர் நடந்த சூழலில் 40 நாட்களுக்குப் பிறகு உடல் நேற்று சென்னை வந்தடைந்தது. பின்னர் உடலை சொந்த கிராமமான வையூர் கிராமத்திற்கு கொண்டுச் சென்று நல்லடக்கம் செய்யப்பட்டது. முன்னதாக மணிவாசன் உடலுக்குதிருக்கோவிலூர் சட்டமன்ற உறுப்பினர் பொன்முடி பையூர் கிராமத்திற்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். மேலும் உடலை கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்த பொன்முடிக்கும் உறுதுணையாக இருந்த திருவெண்ணெய்நல்லூர் மேற்கு ஒன்றிய செயலாளர் பி.வி.ஆர். விசுவநாதன் அவர்களுக்கும் ஆமூர் கிராமத்தை சேர்ந்த சமூக ஆர்வலர் ஆமூர் செந்திலுக்கும் மணிவாசன் குடும்பத்தினர் நன்றி கூறினர். இதில் முகையூர் தெற்கு ஒன்றிய செயலாளர்கள் லூயிஸ், சடகோபன், ஒன்றிய சேர்மேன் ஓம்சிவசக்திவேல், ஒன்றிய கவுன்சிலர் சத்யராஜ், பையூர் கிளை செயலாளர் குமார் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

### குளச்சல் அருகே

# சிறுமிக்கு ஜூஸில் மயக்க மருந்து கொடுத்து பலாத்காரம்

## 2 ஆண்டுகளுக்கு பின் தொழிலாளி மீது வழக்கு

குளச்சல், மார்ச்.29

குளச்சல் அருகே உள்ள ஒரு கிராமத்தை சேர்ந்த 19 வயது மாணவி தனியார் கல்லூரியில் பி டெக் 2ம் ஆண்டு படித்து வருகிறார். இவரது தந்தை இறந்து விட்டார். தாயார் வெளிநாட்டில் வேலை செய்து வருகிறார். இதனால் கிராமத்தில் உள்ள தனது தாத்தா பாட்டியுடன் மாணவி வசித்து வருகிறார்.

அவரது தாத்தா வீட்டு மாடியில் மண்டைக்காடு புதூர் பகுதியை சேர்ந்த தொழிலாளி ஜஸ்டாலிசன் ஜேம்ஸ் (43)என்பவர் குடும்பத்துடன் வாடகைக்கு வசித்து வந்துள்ளார். இந்த நிலையில் தாத்தா பாட்டியின் வயது மூப்பு காரணமாக அவர்களுக்கு ஜஸ்டாலிசன் ஜேம்ஸ் உதவிகள் செய்து அந்த குடும்பத்துடன் நெருங்கி பழகி வந்தார்.

இதற்கிடையே கடந்த 2024 ஆம் ஆண்டு சிறுமியின் 17 வது வயதில் அவர் குளிக்கும் போது ஜன்னல் வழியாக செல்போனில் படம் பிடித்து, படத்தை சமூக தளங்களில் பரப்பி விடுவதாக மிரட்டியுள்ளார். பின்னர் ஒரு நாள் வீட்டின் மேல் தளத்திற்கு அழைத்து மயக்க மருந்து ஜூசை கொடுத்து சிறுமியை பலாத்காரம் செய்ததோடு, அதனை வீடியோ எடுத்து வைத்துக்கொண்டு சிறுமியை மிரட்டி வந்துள்ளார். இதனால் பயந்து போன சிறுமி சம்பவத்தை வெளியே யாரிடமும் சொல்லாமல் இருந்து வந்துள்ளார்.

இதை அடுத்து சிறிது நாளில் ஜஸ்டாலிசன் ஜேம்ஸ் வீட்டைகாலிசெய்துவிட்டுகுடும்பத்துடன்சென்னைக்கு சென்று விட்டார். தற்போது சம்பவம் நடந்து 2 ஆண்டுகள் கழிந்த நிலையில் மாணவி கல்லூரியில் படித்து வருவதால் சமூக வலை தளத்தில் பாலியல் விழிப்புணர்வு குறித்த நிகழ்ச்சியை பார்த்து உள்ளார். அப்போது தனக்கு 2 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த கொடுமையை நினைத்து வருந்திய மாணவி, துணிச்சல் அடைந்து உண்மையை வெளிச்சத்தை கொண்டு வர முடிவு செய்து குளச்சல் மகளிர் காவல் நிலையத்தில் தனக்கு நேர்ந்த கொடுமை குறித்து புகார் அளித்தார். இதனை தொடர்ந்து போலீசார் விசாரணை நடத்தி, சிறுமியை பலாத்காரம் செய்த ஜஸ்டாலிசன் ஜேம்ஸ் மீது போக்சோ பிரிவில் வழக்கு பதிவு செய்து, சென்னை சென்று அவரை கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

# எல் கே ஜி சிறுமி 50 திருக்குறளை மனப்பாடம் செய்து சாதனை



திருப்பூர்: மார்ச்29

15 வேலம்பாளையம் திருப்பூர் பகுதியில் உள்ள ஆங்கில பள்ளி ஜெய் சாரதா மேல்நிலை பள்ளியில் படித்து வரும் எல்கேஜி படிக்கும் மாணவி 50 திருக்குறள் மற்றும் அனைத்து படிப்புகளிலும் முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.. பாசில் ராஜா அப்ரின் தம்பதிகளின் மகளான ஆரிஃபா சிறுவயது முதலிலே தனது படிப்பில் மிகவும் ஆர்வம்காட்டி வரும்பள்ளி மாணவி 50 திருக்குறள்களை மனப்பாடம் செய்து. இன்று நடைபெற்ற 2026ம் ஆண்டு பள்ளி விழாவில் தான் படித்த திருக்குறள்களை அனைத்தையும் மனப்பாடத்தில் ஆசிரியர்கள் பொதுமக்களிடம் ஒப்படைத்தார். ஆண்டு விழாவிற்கு வருகை தந்த அனைவரும் மகிழ்ச்சி அடைந்து மாணவியை பாராட்டி மகிழ்ந்தனர்..

# தோட்டத்துமடம் கோயில் விழாவில் நடன போட்டி

## பாஜக செயற்குழு உறுப்பினர் விஜயதரணி துவக்கி வைத்தார்



மார்த்தாண்டம், மார். 29

மார்த்தாண்டம் அருகே தோட்டத்து மடம் நவநீத கிருஷ்ண சுவாமி கண்டேஷ்வரர் பத்ரகாளியம்மன் கோயில் 683 ம் ஆண்டு பஜனை பட்டாபிஷேகம், பொங்கல் வழிபாடு மற்றும் சிறப்பு பரிகார பூஜைகள் திருவிழா கடந்த 23தேதி துவங்கி நடைபெற்று வருகிறது.

விழாவில் முக்கிய நிகழ்வுகளில் ஒன்றான மாவட்டத்தில் பல்வேறு ஆலயங்களை சேர்ந்த அணிகள் பங்கேற நடன போட்டி நடைபெற்றது. இந்த நடனபோட்டியை முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் பாஜக மாநில செயற்குழு உறுப்பினருமான விஜயதரணி குத்து விளக்கு ஏற்றி வைத்தார்.

மாநில சிறப்பு செயற்குழு உறுப்பினர் ஜெயசீலன் கொடியசைத்து நிகழ்ச்சியை துவங்கி வைத்தார். நிகழ்ச்சியில் பரதநாட்டியம், கிராமிய நடனங்கள் என பல்வேறு பக்தி பாடல்களுக்கு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து பங்கேற அணிகள் நடனமாடியது.

வெற்றி பெற்ற அணிகளுக்கு முதல் பரிசாக 10 ஆயிரம் ரூபாய் மற்றும் கோப்பை, 2வது பரிசாக 7500 ரூ மற்றும் கோப்பை, 3வது பரிசாக 5 ஆயிரம் மற்றும் கோப்பை மேலும் கலந்து கொண்ட அனைத்து கோயில் நடன அணி குழுக்களுக்கு ஆயிரம் ரூபாய் வீதம் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 நடைபெறுவதை முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, சூளகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் தேர்தலில் பணியாற்ற உள்ள வாக்குச்சாவடி நிலைய தலைமை அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலை1 நிலை 2, நிலை3 அலுவலர்கள் ஆகிய அலுவலர்களுக்கு நடைபெறும் முதற்கட்ட பயிற்சி வகுப்புகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன், வேப்பனப்பள்ளி சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் கீதா ராணி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# குமரியில் வாக்குச்சாவடி பயிற்சி மையங்கள்

## கலெக்டர் நேரில் பார்வையிட்டு ஆய்வு



நாகர்கோவில், மார்ச்.29

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளுக்குமான தேர்தல் பணிகள் இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின் படி கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதிக்கு பொன்ஜெஸ்லி பொறியியல் கல்லூரியிலும், நாகர்கோவில் சட்டமன்ற தொகுதிக்கு அல்போன்சா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியிலும், குளச்சல் சட்டமன்ற தொகுதிக்கு சுங்கான்கடை செயின்ட் சேவியர் கத்தோலிக் பொறியியல் கல்லூரியிலும், பத்மனாபபுரம் சட்டமன்ற தொகுதிக்கு திருவட்டார் எக்ஸெல் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியிலும்,

விளவங்கோடு சட்டமன்ற தொகுதிக்கு பம்மம் சேக்ரட் ஹார்ட் பள்ளியிலும், கிள்ளியூர் சட்டமன்ற தொகுதிக்கு கருங்கல் பெத்லகேம் பொறியியல் கல்லூரி ஆகிய மையங்களில் வாக்குச்சாவடி முதன்மை அலுவலர்கள் மற்றும் நிலை அலுவலர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டது. இவற்றை குமரி மாவட்ட ஆட்சியர் அழகு மீனா நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இப்பயிற்சியில் 8309 அலுவலர்கள் கலந்துகொண்டுள்ளனர். மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வீ பேட் கருவிகள் கையாள்வது குறித்து அலுவலர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.

இந்த பயிற்சி வகுப்புகளில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) சுகிதா, பத்மநாபபுரம் சட்டமன்ற தொகுதி தேர்தல் அலுவலர் மற்றும் பத்மநாபபுரம் சார் ஆட்சியர் வினய்குமார் மீனா, நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் காளீஸ்வரி, குளச்சல் சட்டமன்ற தொகுதி தேர்தல் அலுவலர் கலைமதி, விளவங்கோடு சட்டமன்ற தொகுதி தேர்தல் அலுவலர் செந்தூர் ராஜன், கிள்ளியூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் அலுவலர் ஈஸ்வரநாதன், கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதி தேர்தல் அலுவலர் புஷ்பாதேவி, சட்டமன்ற தொகுதி உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் வட்டாட்சியர்கள், அலுவலர்கள், பயிற்சியாளர்கள், ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# ஊத்தங்கரை அதிமுக வேட்பாளருக்கு உற்சாக வரவேற்பு

## தலைவர்கள் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்



கிருஷ்ணகிரி, மார்ச். 29

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதி அதிமுக வேட்பாளராக முன்னாள் எம்.எல்.ஏ டி.எம். தமிழ்செல்வம் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவருக்குத் தொகுதி முழுவதும் தொண்டர்கள் மற்றும் கூட்டணிக் கட்சியினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வேட்பாளரை அறிவிக்கப்பட்ட டி.எம். தமிழ்செல்வம், மத்தூர் மற்றும் ஊத்தங்கரை பகுதிகளுக்கு வருகை தந்தார். முன்னதாக, மத்தூர் சிவன் கோவிலில் வேட்பாளர் மற்றும் கூட்டணிக் கட்சியினர் பங்கேற்ற சிறப்புப் பூஜை மற்றும் அபிஷேகங்கள் நடைபெற்றன.

வழிபாட்டிற்குப் பிறகு அங்கிருந்து புறப்பட்ட அவருக்கு வழிநெடுகிலும் தொண்டர்கள் உற்சாக முழக்கமிட்டு வரவேற்பு அளித்தனர். ஊத்தங்கரை ரவுண்டானா பகுதியை வேட்பாளர் வந்தடைந்தபோது, அதிமுக, பாரதிய ஜனதா கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி, அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் மற்றும் தமிழ் மாநில காங்கிரஸ் உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரண்டு வந்து அவருக்குப் பிரம்மாண்ட வரவேற்பு அளித்தனர். தொடர்ந்து, ஊத்தங்கரை நான்கு முனை சந்திப்பில் அமைந்துள்ள மறைந்த தலைவர்களான புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர், பேரறிஞர் அண்ணா, அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், பெருந்தலைவர் காமராஜர் ஆகியோரின் சிலைகளுக்கு வேட்பாளர் டி.எ ம். தமிழ்செல்வம் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்வில் மாவட்ட, ஒன்றிய, நகர மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சிப் பொறுப்பாளர்கள் எனப் பெருந்திரளானோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற தொகுதிக்கு அதிமுக சார்பில் வி. மரகதம் வெற்றிவேல் வேட்பாளர்களாக தலைமை கழகம் அறிவித்துள்ளது. வயது 50 , படிப்பு 11 ம் வகுப்பு , முகவரி மதிகோண் பாளையம் தருமபுரி, இவரது தந்தையின் பெயர் அண்ணாமலை (முன்னாள் எம்எல்ஏ) கணவர் பெயர் எஸ். ஆர். வெற்றிவேல் மாவட்ட அம்மா பேரவை செயலாளர், மகள் ரேணுகாதேவி, மகன் நிதிஷ்குமார், வன்னியர் இனத்தை சார்ந்தவர் கட்சியில் உறுப்பினராக இருந்து வருகிறார்.



தருமபுரி மாவட்டம் அரூர் சட்டமன்ற தொகுதிக்கு அதிமுக சார்பில் வே. சம்பத்குமார் வேட்பாளர்களாக தலைமைக் கழகம் அறிவித்துள்ளது. இவரது வயது 52 , கல்வி தகுதி எம் , பி, சி , பி எட், டிப்ளமோ கோ ஆப்ரேடிவ், முகவரி பொய்யம்பட்டி தீர்த்தமலை அரூர், தந்தையின் பெயர் வேடியப்பன், மனைவி கோவிந்தி (சத்துணவு அமைப்பாளர்), மகள்கள் சுதந்திர பிரியா, கோகுல பிரியா, மகன் சிபி, எஸ் சி ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவர். அதிமுகவில் வடக்கு ஒன்றிய செயலாளரக இருந்து வருகிறார். இவர் ஏற்கனவே வகித்த பதவிகள் கடந்த 2019 ம் ஆண்டு நடந்த சட்டமன்ற இடைத்தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார். 2021 ம் ஆண்டு முதல் தற்போது வரை எம்எல்ஏவாக இருந்து வருகிறார். இவர் ஏற்கனவே இரண்டு முறை அதிமுக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார். தற்போது மூன்றாவது முறையாக அதிமுக சார்பில்அரூர்சட்டமன்றவேட்பாளராகபோட்டியிடுகிறார்.

## தமிழக வெற்றி கழக மகளிர் அணியினரை இழிவுபடுத்தி பேசிய நபர் மீது நடவடிக்கை எடுக்க கோரி புகார் மனு.



செங்கல்பட்டு மாவட்டம் தமிழக வெற்றி கழகம் தலைவர்வி ஜய் ஆணைக்கிணங்க பொதுச் செயலாளர் புஸ்சி ஆனந்த் ஆலோசனைப்படி மதுராந்தகம் காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில்மகளிர் அணியினரை இழிவாக பேசிய நபர் மீது புகார் மனு வழங்கினர். தமிழக வெற்றிக் கழகத்தின் மகளிர் அணியினரை இழிவுபடுத்தும் வகையில் அவதூறாக பேசிய பொன்ராஜ் வெள்ளை சாமி, என்பவர் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கக்கோரி மகளிர் அணி நிர்வாகி சுமதி சாமிகண்ணு தலைமையில் செங்கல்பட்டு மாவட்ட மகளிர் நிர்வாகிகள் மதுராந்தகம் காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் மனு வழங்கினர். மேலும் சம்பந்தப்பட்ட பொன்ராஜ் வெள்ளைச்சாமி மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என புகார் மனுவில் தெரிவித்துள்ளனர். இந்நிகழ்வின் போது வழக்கறிஞர் ராஜேஷ் மாவட்ட கழக துணை செயலாளர் ஷீபா, நகரத் தலைவர் பெருமாள்அ ச்சிறுப்பாக்கம் ஒன்றிய தலைவர் செந்தில் செயற்குழு உறுப்பினர் கோகிலா மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள்பூ ங்கொடி எமிமாள் காயத்ரி விஜி சிவரஞ்சனி காஞ்சனா அனிதா புவனேஸ்வரி கற்பகம் யசோதா துளசி சந்திரலேகா இளவரசி அமராவதி அம்பிகா சரஸ்வதி லட்சுமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## மக்கள் உரிமைக் கட்சி சார்பில் செய்தியாளர் சந்திப்பு



கோவை மார்ச்:29

கோவை காந்திபுரம் பகுதியில் உள்ள தனியார் அரங்கில் செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது.

அதில் கூறியதாவது

"ஓ பி சி மக்கள் உரிமைக்கான கட்சி" இந்திய தேர்தல் ஆணையத்தில்,பதிவு செய்யப்பட்ட கட்சி.இது கடந்த 2020 டிசம்பர் மாதம் முதல் தமிழகமெங்கும் இயங்கி வரும் சட்டபூர்வமாக பதிவு செய்யப்பட்ட "பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர் உரிமைக்கான கூட்டமைப்பு மக்களின் உயர்கல்வி,அரசு நிர்வாகத்தில் பங்கு,சமுதாய முன்னேற்றம் ஆகிய ஜீவாதார அடிப்படை நோக்கங்களுக்காக சட்டப் போராட்டங்கள்,களப்போராட்டங்களை நடத்தி வருகிறது.

அத்துடன் சமூக ஊடகங்களான, வலைதளங்களின் மூலமாக இளையோருக்கு கல்வி,வேலைவாய்ப்பு, போட்டி தேர்வுகளுக்கான பாடங்கள் ஆகியவற்றையும்; இந்தியாவெங்கும் அன்றாடம் வரும் அனைத்து வேலை வாய்ப்புகளையும் எங்கள் வலைத்தளம் "www.obcrights.org" மூலம் வழங்கி வருகிறோம். இவற்றை மாதத்திற்கு பல லட்சம் இளைஞர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

அத்துடன் அனைத்து தரப்பு மக்களுக்கும் அவசியமான தேவைகளுக்கு உதவ கோவை, ஈரோடு, சிவகிரி ஆகிய இடங்களில் "ஓ பி சி மக்கள் மையங்கள்" எங்கள் ஊழியர்கள் மூலம் நடத்தப்படுகிறது. தற்போது எங்கள் நோக்கங்களை அரசு மூலம் பரவலாக செயல்படுத்த ஓர் அரசியலமைப்பு தேவை என்பதால், நாங்கள் எதற்காக போராடுகிறோமோ அதே பேரில் "ஓ பி சி மக்கள் உரிமைக்கான கட்சி" என்ற பெயரில் ஒரு அரசியல் கட்சியை இந்திய தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்துள்ளோம். வருகின்ற தமிழக சட்டமன்ற தேர்தல்களில் எங்கள் வேட்பாளர்கள் வெற்றி பெற்றால், கீழ்க்கண்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம் என உறுதி அளிக்கின்றோம். கல்வி,வேலை வாய்ப்புகள் விவசாயம்,சிறு தொழில் வியாபாரம்,அரசு ஊழியர்களின் பிரச்சனைகள்,நிதி மேலாண்மை, கலாச்சாரம் மகளிர் மாண்பு,பொது அமைதி இட ஒதுக்கீடு. வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம் என்று கூறினார்.

### விளாத்திகுளம்

## சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளராக மார்கண்டேயன்

### பட்டாசுகளை வெடித்து பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கி உற்சாகத்தில் திமுகவினர்



விளாத்திகுளம் மார்ச் 29.

தமிழக 2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, திமுக சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை தமிழ்நாட்டின் தற்போதைய முதலமைச்சரும், திராவிட முன்னேற்றக்கழகத்தின் தலைவர் மு.க. ஸ்டாலின் அறிவித்தார்.

அதன்படி தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதிக்கு திமுக வேட்பாளராக மார்கண்டேயனுக்கு மீண்டும் போட்டியிட அதிகாரப்பூர்வமாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

விளாத்திகுளம் திமுக வேட்பாளர் மார்கண்டயேன், இதற்கு முன்னதாக அதிமுக புதூர் ஊராட்சி ஒன்றிய குழு பெருந்தலைவர், 2011 to 2016 வரை அதிமுக சட்டமன்ற உறுப்பினர். அதனைத் தொடர்ந்து அதிமுகவிலிருந்து விலகி 2019 இடைத்தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிட்டு தோல்வி,பின்னர் 2020ல் திமுகவில் இணைந்து 2021 சட்டமன்றத் தேர்தலில் திமுக சார்பில் போட்டியிட்டு விளாத்திகுளம் தொகுதியில் மீண்டும் சட்டமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டு ஐந்தாண்டுகள் சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றி வரும் நிலையில்,

தற்போது மீண்டும் தற்போதைய விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயனுக்கு விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதியில் திமுக சார்பில் போட்டியிட திமுக தலைமை அறிவித்ததை தொடர்ந்து, விளாத்திகுளம் பகுதி திமுகவினர் விளாத்திகுளம் பேருந்து நிலையம் முன்பு பட்டாசுகளை வெடித்து பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கி உற்சாகத்தில் உள்ளனர்.




தருமபுரி அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 234 2026 அன்று நடைபெற உள்ளதையொட்டி தேர்தலில் 100% வாக்களிப்பதன் அவசியம் குறித்து கல்லூரியின் மாணவ, மாணவிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் என் வாக்கு என் உரிமை என்ற சூப்பர் சுட்டி ஸ்டிக்கர்களை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியர் சதீஷ் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மேலும் கல்லூரியின் மாணவ, மாணவிகள்தேர்தலில்100%வாக்களிப்பதன்அவசியத்தைகுறித்துரங்கோலிகோலங்களை வரைந்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்கள். இதனை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டார். இதில் மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகாமைதிட்ட இயக்குனர் ரூபன்சங்கர் ராஜ், மகளிர்திட்ட அலுவலர் சுந்தர்ராஜன், தருமபுரி சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் காயத்ரி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் லோகநாதன், வட்டாட்சியர் சுகுமார், தருமபுரி அரசு கலைக் கல்லூரி முதல்வர் கண்ணன்உள்ளிட்டதொடர்புடையஅரசுஅலுவலர்கள், கல்லூரியின்மாணவ, மாணவிகள் மற்றும் கல்லூரியின் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.



சேலம் வீரபாண்டி சட்டமன்ற தொகுதிக்கு அதிமுக வேட்பாளராக அறிவித்தமைக்கு பனமரத்துப்பட்டி மேற்கு ஒன்றிய ஜெயலலிதா பேரவை செயலாளர் டாக்டர் ஸ்ரீ பாலாஜி சுகுமார் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி கே. பழனிச்சாமியை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். சேலத்தில் முன்னாள் வீரபாண்டி சட்டமன்ற உறுப்பினர் மனோன்மணி மற்றும் கட்சியின் முக்கிய நிர்வாகிகள் தமிழ்மணி,செல்வபிரகாஷ்,ஜெகநாதன், பாலச்சந்தர்,ஏடிசி நல்லப்பன்,சின்னத்தம்பி,பன்னீர்செல்வம்,கனிமொழி, வைர மாணிக்கம் மேலும் அதிமுக ஒன்றிய நிர்வாகிகள், கழக முன்னோடிகள்,கட்சித் தொண்டர்கள் திரளாக வந்து வீரபாண்டியில் உள்ள இல்லத்தில் அதிமுக வேட்பாளர் ஸ்ரீ பாலாஜி சுகுமாரை நேரில் சந்தித்து சால்வை அணிவித்தும்,மலர்மாலை அணிவித்தும் வாழ்த்தினார்கள்.

### பேச்சிப்பாறை

## காணி பழங்குடியின மக்களிடையே தேர்தல் விழிப்புணர்வு



நாகர்கோவில், மார்ச்.29

கன்னியாகுமரி மாவட்டத்தில் மலை வாழ் பழங்குடியினர் வசிக்கும் 42 கிராமங்கள் உள்ளன. இங்குள்ள காணி பழங்குடியின மக்கள் தங்களது வாக்கினை செலுத்த போக்குவரத்திற்கு அதிக செலவினை செய்தும், மலையிலிருந்து இறங்கி நீண்ட தூரத்தில் உள்ள வாக்குச்சாவடி மையத்திற்கு சென்று, தங்கள் வாக்கினை பதிவு செய்ய வேண்டிய நிலையுள்ளது.

இக்கிராமங்களில் உள்ள மலைவாழ் மக்கள் வாக்களிக்க முன்னேற்பாடு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே மலைவாழ் மக்கள் அனைவரும் தங்கள் வாக்கினை தவறாது செலுத்தி தங்கள் ஜனநாயக கடமையினை நிறைவேற்ற காணி பழங்குடியின மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதோடு, பழங்குடியினரின் நாட்டுப்புற இசை நிகழ்ச்சிகள் வாயிலாகவும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

அதன்ஒருபகுதியாக, பேச்சிப்பாறை மற்றும் அதனைச் சுற்றியுள்ள அரசு ரப்பர் கழகத் தோட்டங்களில் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் ரப்பர் பால் வெட்டும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

பேச்சிபாறை ஊராட்சிக்குட்படட மாங்காமலை மலைப்பகுதியில் உள்ள ரப்பர் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் மலைவாழ் காணி பழங்குடியின மக்களை இன்று நேரில் சந்தித்து, ஜனநாயக கடமையான வாக்களிப்பதன் அவசியம் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அழகுமீனா தலைமை வகித்தார்.

தேர்தல் விழிப்புணர்வு கண்காணிப்பு அலுவலர் மற்றும் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மைக்கேல் அந்தோணி பெர்னாண்டோ, திருவட்டார் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ரப்பர் தோட்ட பணியாளர்கள், பழங்குடியினர் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

### கொள்ளுமேடு, நபி கிரசன்ட் மெட்ரிகுலேஷன் ஸ்கூலின்

## 28 வது ஆண்டு விழா மற்றும் கிண்டர் கார்டன் கிராஜுவேஷன்




சென்னை, கொள்ளுமேடு, நபி கிரசன்ட் மெட்ரிகுலேஷன் ஸ்கூல், 28 வது ஆண்டு விழா மற்றும் கிண்டர் கார்டன் கிராஜுவேஷன் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்கள் கொள்ளுமேடு சிவில் சர்ஜன் ப்ளாக் மெடிக்கல் ஆபீசர் டாக்டர் பனிமலர், வேர்ல்ட் ரெக்கார்ட் ஹோல்டர், விஜய் டிவி கலக்கப்போவது யாரு செசன் ஐந்து டாக்டர். ஆழி செந்தில் பள்ளியில் விளையாட்டுப் போட்டிகள் தேர்வுகளில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகள் மற்றும் வருகை பதிவேட்டில் முதலிடம் பிடித்த மாணவ மாணவிகளுக்கு மற்றும் கடந்த வருடம் பத்தாம் வகுப்பில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த ஐந்து மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் கேடயம் வழங்கி உற்சாகப்படுத்தினர். பேச்சுப்போட்டி, ஆடல் பாடல் நிகழ்ச்சி மேலும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றது. மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் பள்ளி தாளாளர் கே.முகமது உசைன் மற்றும் துணை தாளாளர் கே.ஹெச். நூர்ஜகான் மற்றும் முதல்வர் தலைமை ஆசிரியர் துணை முதல்வர் பள்ளி நிர்வாக அதிகாரி மற்றும் ஆசிரியர்கள் வழங்கினார்கள். பள்ளி நிகழ்ச்சியில் மாணவ மாணவிகளின் பெற்றோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.